DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**S.T.C.No. 495/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | DW4 | Caste | : | |
| Name | : | நம்புராஜன் | Age | : | 49 |
| F/N | : | செல்லம் | Occupation | : | ஹோட்டல் வைத்துள்ளேன் |
| Village | : | ராமேஸ்வரம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 20th day of September 2024.

**20.09.2024**

**(புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் இராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் குடியிருந்து கொண்டு ஹோட்டல் வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 15.09.2017-ம் தேதி தென்னரசு என்பவரிடமிருந்து என் மனைவி சுதா பெயரில் குடிசை வீட்டை வாங்கினேன். அப்போது இட புரோக்கராக செயல்பட்டவர் தான் புகார்தாரர் மகாலிங்கம். மேற்படி எனது மனைவி பெயரில் வாங்கிய கிரைய பத்திரத்தில் முதல் சாட்சியாக கிராம தலைவர் மாரிமுத்து என்பவரும், இரண்டாவது சாட்சியாக புகார்தாரர் மகாலிங்கம் என்பவரும் கையெழுத்து செய்தனர். மேற்படி இடத்தை வாங்கும்போது என்னிடம் ரூ. 9,00,000/-ம் மட்டும் இருந்தது. புகார்தாரர் மகாலிங்கம் நான் வேண்டுமென்றால் ரூ. 4,00,000/-த்தை வட்டிக்கு வாங்கி தருவதாக என்னிடம் கேட்டார். மேற்படி ரூ. 4,00,000/-த்திற்கு ரூ. 1,00,000/-ம் வட்டி என்றும் அந்த தொகையை 20 மாத தவணைகளில் செலுத்தவேண்டும் என்றும் கூறினார். மேற்படி ரூ. 4,00,000/-த்திற்கும் ரூ. 1,00,000/-த்திற்கும் ஈடாக ரூ. 4,00,000/-ம் நிரப்பப்பட்ட காசோலையையும்(காசோலை எண். 2009923) நிரப்பப்படாத ஒரு காசோலையையும் (காசோலை எண். 2009924) கடந்த 23.06.2017 தேதி புகார்தாரரிடம் கொடுத்தேன். என்னை புகார்தாரர் தங்கச்சிமடத்தில் உள்ள அவரது நண்பர் வீட்டிற்கு அழைத்து சென்றார்.

**2.** அங்கு சென்றவுடன் புகார்தாரர் என்னை வெளியே நிப்பாட்டிவிட்டு அவர் மட்டும் உள்ளே சென்றார். வெளியே வந்த பிறகு புகார்தாரர் என்னிடம் முதல் தவணை பணத்தை பிடித்துக்கொண்டு மீதம் ரூ. 3,75,000/-ற்கு உண்டான காசோலையை என்னிடம் கடந்த 26.06.2017-ம் தேதி ஒப்படைத்தார். மேற்படி காசோலையை என் வங்கியில் செலுத்தி நான் பணத்தை எடுத்துக்கொண்டேன். நான் மாத தவணை தொகையை சரியாக கட்டி வந்தேன்.

சில மாதங்களில் என்னால் 5ம் தேதிக்குள் பணத்தை கட்ட முடியவில்லை. இது சம்மந்தமாக புகார்தாரர் ஊர் தலைவராக மாரிமுத்துவிடம் முறையிட்டார். அவர் என்னிடம் பேசி இரண்டு தவணை தொகையான ரூ. 50,000/−த்தை என்னிடம் வாங்கி புகார்தாரரிடம் கொடுத்தார். கடந்த 10.10.2018−ம் தேதி மீதம் இருந்த மூன்று தவணை தொகையான ரூ. 75,000/−த்தை நான் புகார்தாரிடம் கொடுத்தேன். அப்போது சாட்சியாக கோபி மற்றும் மாணிக்கம் இருந்தார்கள். பணம் கொடுத்த பிறகு என்னிடம் இருந்த உடன்படிக்கை பத்திரத்தை புகார்தாரர் வாங்கி சென்றார். இரண்டு தினங்களுக்குள் காசோலைகளை திருப்பி தருவதாக புகார்தாரர் கூறினார்.

**3.** பிறகு கடந்த 13.10.2018−ம் தேதி புகார்தாரர் என்னிடம் வந்து நீங்கள் வாங்கிய கடன் தொகையை திரும்ப செலுத்திவிட்டீர்கள் ஆனால் எனக்கு சேர வேண்டிய கமிஷன் தொகையை குறைவாக கொடுத்துள்ளீர் என்று கூறினார். நான் கிரையம் செய்யும் போது கமிஷன் தொகையாக ரூ. 25,000/−த்தை புகார்தாரரிடம் கொடுத்தேன். நான் வாங்கிக்கொடுத்த நிலத்திற்கு ரூ. 2,00,000/−ம் கமிஷன் தொகை வேண்டுமென்று புகார்தாரர் என்னிடம் கேட்டார். மேற்படி தொகையை கொடுத்தால் தான் என்னிடம் இருந்து வாங்கிய இரண்டு காசோலைகளை தருவேன் என்று புகார்தாரர் கூறினார். சாட்சிகள் முன்னிலையில் நான் உங்களிடம் பணத்தை கொடுத்துவிட்டேன். ஊர்காரர்களை வைத்து எனது காசோலைகளை வாங்கிக்கொள்கிறேன் என்று கூறினேன். முடிந்தால் வாங்கிக்கொள் என்று புகார்தாரர் கூறினார். பின்னர் நான் கொடுத்த நிரப்பப்படாத காசோலையை வங்கியில் செலுத்தி எனது தாயாரின் வீட்டிற்கு வழக்கறிஞர் அறிவிப்பை புகார்தாரர் அனுப்பினார். பின்னர் நான் எனது வழக்கறிஞரை அணுகி வழக்கு காசோலையை நீதிமன்றத்தில் பார்த்தபோது காசோலையில் உள்ள வாசகங்கள் வேறொருவரால் எழுதப்பட்டுள்ளது என்பதை தெரிந்துகொண்டேன்.

**4.** மேற்படி நிரப்பப்படாத காசோலைக்கு பின்னால் உள்ள காசோலைகளை எனது வங்கியில் செலுத்தி பணப்பரிமாற்றம் செய்துள்ளேன். புகார்தாரர் பல நபர்கள் மீது பல காசோலை வழக்குகளை இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் தொடுத்துள்ளார். 2017ல் கொடுத்த காசோலையை வைத்து போலியாக இந்த வழக்கை என் மீது புகார்தாரர் தொடுத்துள்ளார். **(எதிரியின் யூனியன் பேங்க் ஆப் இந்தியா இராமேஸ்வரம் வங்கி கிளையின் பண பரிவர்த்தனை (04.01.2017 to 21.10.2017) எ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியின் யூனியன் பேங்க் ஆப் இந்தியா இராமேஸ்வரம் வங்கி கிளையின் பண பரிவர்த்தனை (02.01.2018 to 22.12.2018) எ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியின் யூனியன் பேங்க் ஆப் இந்தியா இராமேஸ்வரம் வங்கி கிளையின் கணக்கு புத்தகம் அசல் எ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

**(ஒப்பம்/-க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**